ந.க.எண்.7660/2020/கே4 மாவட்ட ஆட்சியரகம்,
நாள்: 18.11.2020 திருவாரூர் மாவட்டம்.

# பத்திரிக்கைச் செய்தி

## ஆதிதிராவிடர் நலத்துறையில் சமையலர் மற்றும் துப்புரவாளர் வேலைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

திருவாரூர் மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளுக்கு 22 சமையலர் பணியிடங்கள் 15700-50000 என்ற ஊதிய பிணைப்பில் ரூ.15,700/- ஊதியம் மற்றும் 06 தொகுப்பூதிய துப்புரவாளர் பணியிடங்கள் (மாத தொகுப்பூதியம் ரூ.3,000/-) ஆகிய பணியிடங்களை பூர்த்தி செய்வதற்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

- விண்ணப்பதாரர் தமிழில் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- சமையலர் பணியிடத்திற்கு அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமைத் தரப்படும்.
- 18 வயது முதல் 35 வயது வரை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
- திருவாரூர் மாவட்டத்தில் குடியிருப்பவராக இருக்க வேண்டும்.

தகுதியான நபர்கள் திருவாரூர் மாவட்டம், திருவாரூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் விண்ணப்பங்களை பெற்று நேரடியாகவோ, பதிவஞ்சல் மூலமாகவோ மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திற்கு 03.12.2020-க்குள் விண்ணப்பித்திட மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஒம்/----
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவாரூர் மாவட்டம்.

பெறுநர்
மக்கள் தொடர்பு அலுவலர்,
திருவாரூர் மாவட்டம்,

//ஆணைப்படி//

மாவட்ட ஆட்சியருக்காக,
திருவாரூர்.